**தலைப்பு 234 – உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளயதாகவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

கீழ்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிசாரா சொத்துக்களில் (ஏசீஏ-6) கடந்த வருடத்தில் இறுதி மீதிகள் காட்டப்படாது மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 13,757,201 கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அந்நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் அல்லது வெளிக்காட்டப்பட்டு இருக்கவில்லை. | ஆரம்ப மீதியில் வேறுபாடானது நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிக்காட்டப்பட வேண்டியமை. | 2019 ஆம் வருடத்தில் திறைசேரியின் உடன்பாட்டின் அடிப்படையில் 2018.12.31 ஆந் திகதியில் இருந்த அனைத்துச் சொத்துக்களினதும் ஆரம்ப மீதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டது. இவை குறிப்புக்களில் வேறாகக் காட்டப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உயர் நீதிமன்றத்திற்கு உரித்தான 8 வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டரீதியாக உரித்தான உயர் நீதிமன்றத்திற்குரிய சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியமை. | வாகனங்கள் கணக்கிலெடுப்பதற்காக திறைசேரியின் கணக்குகள் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி பெறுமதி தொடர்பான இறுதி உடன்பாட்டிற்கு வர முடியாமல் போனது. 2020 ஆம் வருடத்தில் உயர்நீதிமன்றத்திற்கு உரித்தான அனைத்து வாகனங்களும் காப்புறுதி பெறுமதியின் அடிப்படையில் கணக்கில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டில் தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 8,511,764 செலவிடப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் (ஏசீஏ-6 படிவம்) கொள்வனவின் மூலம் நிலையான சொத்துக்கள் கொள்வனவுகள் ரூபா 8,385,061 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 126,703 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | வருடத்தில் சொத்துக்கள் கொள்வனவு செய்தமைக்கான செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டியமை. | மீளாய்வாண்டில் சொத்துக்கள் கொள்வனவிற்கான செலவு விடயங்களின் கீழ் வருடத்தினுள் ரூபா 8,511,764 செலவிடப்பட்டு CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதிசாரா சொத்துக்கள் 9152 இன் கீழ் மற்றும் 9165 இன் கீழ் தன்னிச்சையாக நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டதுடன் இது சம்பந்தமான திறைசேரியின் கணக்குகள் திணைக்களத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அறிவிப்பதற்கான நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தரின் முற்பண “பீ” கணக்கு 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உயர்நீதிமன்றத்தின் பதிவாளரின் புத்தகங்களின் பிரகாரம் வரவு | இணக்கமின்மை சம்பந்தமாக கண்டு பிடித்து சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் | வேறுபாடு திருத்தப்படுவதற்கு இதுவரையில் முயற்சிகள் எடுக்கப்படவில்லை. குறிப்பிட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடாத்தி |

| | | |
|---|---|---|
| மீதி ரூபா 38,731,193 என்பதுடன் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா 38,662,948 ஆக இருப்பதால் ரூபா 68,245 உயர்நீதிமன்றத்தின் பதிவாளரின் புத்தகங்களில் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. 2011 திசெம்பரிலிருந்து காட்டப்படும் இம்மீதிக்கு சம்பந்தப்பட்ட பதிவேடுகள் இன்மையால் இவ்வேறுபாடு திருத்தப்படாமல் தொடர்ந்தும் மீதியாக கொண்டு வரப்படுகின்றது. | எடுக்கப்பட வேண்டியமை. | இதனை 2020 ஆம் ஆண்டின் இறுதியின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாக காட்டப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 6 வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்ட விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2020 வருடத்திலிருந்து வாகனங்களில் எரிபொருள் எரிப்பிற்கான சோதனைகள் கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(i) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | குடிமக்களின் சாசனம் செயற்படுத்தப் படவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உயர்நீதிமன்ற முறைமை திணைக்களமாக காணப்படுவதுடன் அதனூடாக அடிப்படை நீதிமன்ற நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதால் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 5/2008 மற்றும் 5/2008(i) இன் பிரகாரம் சாசனமாக இதுவரையில் செய்யப்படவில்லை. ஆனால் பொதுமக்களின் தேவைகள் விரைவில் வினைத்திறனாகவும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தரமானதாகவும் மற்றும் தொடர்ச்சியாகவும் நிறைவேற்றப்படுகின்றன. இருந்த போதிலும், ஏனைய உயர் நீதிமன்ற விதிகளுக்கு இணங்காத விதத்தில் குடிமக்கள் சாசனம் ஒன்று தயாரிப்பதற்கு இற்றை வரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. |
| (iii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2020 ஆம் வருடத்திற்காக தயாரிப்பதற்குத் தேவையான ஆலோசனை பெறப்பட்டிருப்பதுடன் விரைவில் செயற்படுத்தப்படும். |
| (ஆ) | தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை<br>---------------------------------- | | | |
| | 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் உப பிரிவு | 2019 யூன் 03 இல் இடம்மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரின் இடர்க்கடன் ரூபா 197,060 மற்றும் விழா முற்பணம் ரூபா 8,750 உம் ஆக மொத்தம் ரூபா 205,810 ஆன மொத்தக் கடன் மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இவ்வருடத்தின் போது தீர்க்கப்படுவதற்காக நீதி அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1983 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய இலங்கை வங்கியின் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 21,014,984 ஆன மீதி பல வருடங்களாக செயலற்றதாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2019.12.31 ஆந் திகதியில் மீதியான ரூபா 21,000,000 ஆன தொகை வழக்கிற்காக வைப்புச் செய்யப்பட்டது. இதைத் தீர்ப்பதற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பின்னர் இக்கணக்கை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மிகுதி நிலுவையான ரூபா 14,984 ஆன தொகை இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2017 பெப்ரவரி மாதத்தின் கண்டுபிடிக்கப்பட்ட மொத்தம் ரூபா 48,978 வங்கியிலிடப்படாத வைப்புத் தொகை தொடர்ந்தும் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காரணம் கண்டு பிடிக்கப்பட்டுத் தேவையான செயற்பாட்டினை விரைவில் செய்யப்பட வேண்டியமை. | 2017 பெப்ரவரி மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருந்த ரூபா 48,978 ஆன வங்கியிலிடப்படாத வைப்புக்களுக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தலானது நீதிச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் நீதி அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்டும் குறிப்பிட்ட மீதி தீர்க்கப்படுவதற்கு முடியாது போனது. |

**3. மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உயர் நீதிமன்றத்தின் நீதமன்றப் பதிவாளர் II பதவி மற்றும் தட்டெழுத்தாளர் பதவிகள் 02 இற்காக அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் 06 பேர் மேலதிகமாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர் | மேலதிகப் பதவியணியினரின் எண்ணிக்கை அனுமதிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நீதிமன்றப் பதிவாளர் II மற்றும் தட்டெழுத்தாளர் ஆட்சேர்ப்பதற்கான அதிகாரம் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு மட்டுமே ஆகும். தற்போதைய கடமையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் இடமாற்றலாகி வந்த மற்றும் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களே ஆகும். |
| (ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் மேலதிகமாக 05 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | மேலதிகப் பதவியணயினரின் அனுமதி பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினூடாக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திடம் அனுப்புவது தொடர்பான நடவடிக்கை முன்னால் எடுக்கப்படும். |
| (இ) உயர் நீதிமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட பதவிகள் 06 இற்காக பதவியணியினர் 17 பேருக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | நிறுவனத்தின் நோக்கம் மற்றும் பிரதான குறிக்கோள் பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்குத் தேவையான பதவியணியினர் தொடர்பாக மதிப்பிடப்பட்டுத் தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | நீதிமன்றப் பதிவாளர், நீதிமன்ற எழுதுநர், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிகளின் வெற்றிடம் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பு அபிவிருத்தி அலுவலர் முதன்மை நிலை மற்றும் தொழில்நுட்பம் அற்ற தரத்திற்கான பதவிகளின் வெற்றிடம் நீதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட பதவிகள் 07 இற்காக பதவியணியினர் 20 பேருக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | நிறுவனத்தின் நோக்கம் மற்றும் பிரதான குறிக்கோள் பயனுள்ள வகையில் செய்யப்படுவதற்குத் தேவையான பதவியணியினர் மதிப்பிடப்பட்டுத் தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பதிவாளர் பதவியில் ஓய்வூதியம் சென்றமை காரணமாக வெற்றிடம் ஏற்பட்டது. எழுதுநர், சுருக்கெழுத்தாளர்,தட்டெழுத் தாளர், புத்தகப் பிணைப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கும் மொழி பெயர்ப்பாளர், அலுவலக உதவியாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நீதி அமைச்சிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |